தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

04.01.2013 A.M

## தென் கடலோர தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பு

தென் கடலோர தமிழகத்தின் சில பகுதிகளில் வெள்ளிக்கிழமை மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலையின் காரணமாக வெள்ளிக்கிழமை முதல் தமிழகத்தில் மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

வானிலை முன்னறிவிப்பு: தென் கடலோர தமிழகத்தில் ஆங்காங்கே வெள்ளிக்கிழமை மழை பெய்ய வாய்ப்புள்ளது. பிற பகுதிகள் மற்றும் புதுவையில் வறண்ட வானிலையே காணப்படும்.

சென்னையை பொருத்தவரையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 30 டிகிரி செல்சியஸாக இருக்கும்.

## வேளாண் துறையில் மாற்றம் ஏற்பட முன்னுரிமை: பிரதமர் வலியுறுத்தல்



அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் உள்பட பொது கொள்கைகளை உருவாக்கும்போது, வேளாண்மைத் துறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என பிரதமர் மன்மோகன் சிங் வலியுறுத்தி உள்ளார்.

கொல்கத்தாவில் "100ஆவது இந்திய அறிவியல் மாநாட்டை' குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி வியாழக்கிழமை தொடங்கி வைத்தார். இவ்விழாவில் "அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க கொள்கை 2013'ஐ பிரதமர் மன்மோகன் சிங் வெளியிட்டார். பின்னர் அவர் பேசியதாவது:

நம் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 65 சதவீதம் பேர் கிராமங்களில் வசிக்கின்றனர். உணவு பாதுகாப்பு இலக்கை அடைவதற்கு வேளாண்மைத் துறையில் ஆண்டுக்கு 4 சதவீத வளர்ச்சியை எட்ட வேண்டியது அவசியம் என 12ஆவது ஐந்தாண்டு திட்டத்தில் மதிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கொள்கை உள்பட பொதுக் கொள்கைகளை உருவாக்கும்போது, வேளாண் துறையில் மாற்றம் ஏற்படுவதற்கு முன்னிரிமை கொடுக்க வேண்டும்.

நிலம் மற்றும் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக வேளாண் வளர்ச்சி பாதிக்கப்பட்டு வருகிறது. எனவே, பயிர் சாகுபடிக்காக சிக்கனமாக தண்ணீரைப் பயன்படுத்துவது, நிலத்தின் உற்பத்தித் திறனை அதிகரிப்பது, காலநிலைக்கேற்ற பயிர்களை சாகுபடி செய்வது உள்ளிட்டவற்றில் புதிய தொழில்நுட்பங்களை புகுத்த வேண்டும்.

நம் நாடு நீடித்த பொருளாதார வளர்ச்சி அடைய வேண்டுமானால், சாமானிய மக்களின் தேவையையும் பூர்த்தி செய்யும் வகையிலும் ஏழை, பணக்காரர் இடேயிலான இடைவெளியைக் குறைக்கவும் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியைப் பயன்படுத்த முயற்சிக்க வேண்டும். அதேநேரம் அறிவியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த இளைஞர்களும் தயாராக இருக்க வேண்டும்.

எந்த ஒரு பிரச்னையையும் அறிவியல் ரீதியில் அணுக வேண்டும். குறிப்பாக, மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்கள் அல்லது அணுசக்தி அல்லது அண்டவெளி ஆய்வு உள்ளிட்ட எந்த ஒரு சிக்கல்மிக்க பிரச்னைக்கும், நம்பிக்கை, உணர்ச்சி வேகம் மற்றும் அச்சம் மூலம் தீர்வு கண்டுவிட முடியாது. விரிவான விவாதம், ஆய்வு மற்றும் எண்ணத் தெளிவு ஆகியவற்றின் மூலமே சிக்கலான பிரச்னைகளில் இறுதி முடிவு எடுக்க வேண்டும்.

அறிவியல் திறமையை பேணி வளர்த்தல், அறிவியல் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியில் மாணவர்களை ஊக்குவித்தல் மற்றும் ஆராய்ச்சி, புத்தாக்கத்தில் தனியார் துறை ஒத்துழைப்புக்கான சூழலை உருவாக்குதல் ஆகியவையே அறிவியல், தொழில்நுட்பக் கொள்கையின் முக்கிய நோக்கம்.

ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி திட்டங்களுக்கு நாட்டின் மொத்த உற்பத்தியில் (ஜி.டி.பி.) 2 சதவீத நிதி ஒதுக்கவும், 2020ஆம் ஆண்டில் சர்வதேச அளவிலான முதல் 5 அறிவியல் தொழில்நுட்ப வல்லரசு நாடுகளில் இந்தியாவும் இடம்பிடிக்க வேண்டும் எனவும் இந்தக் கொள்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்பு நடைபெற்ற தேசிய வளர்ச்சி கவுன்சில் கூட்டத்தில் 12ஆவது ஐந்தாண்டு திட்டத்துக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. இதன்மூலம் எண்ணற்ற வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளன.

வேளாண்மைத் துறை மட்டுமல்லாது, ஆற்றல் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பான குடிநீர் ஆகியவற்றுக்கும் சமமான முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றார் மன்மோகன் சிங்.

நமது நவீன அறிவியல் வளர்ச்சியில் பல்வேறு சர்வதேச ஒப்பந்தங்களும் முக்கிய பங்கு வகித்துள்ளன. பொருளாதார தாராளமயமாக்கல் கொள்கை மற்றும் கடந்த கால பொருளாதார வளர்ச்சி ஆகியவை இதற்கு உறுதுணையாக இருந்தன. குறிப்பாக, ஹிக்ஸ் பாஸன் துகளைக் கண்டறிந்த ஐரோப்பிய அணு ஆராய்ச்சி மையத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளோம் என்றும் மன்மோகன் தெரிவித்தார்.

இவ்விழாவில், மேற்கு வங்க மாநில முதல்வர் மம்தா பானர்ஜி, மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் எஸ். ஜெய்பால் ரெட்டி, மேற்குவங்க ஆளுநர், நோபல் பரிசு பெற்றவர்கள் மற்றும் அறிவியல் வல்லுநர்கள் கலந்து கொண்டனர்.

## தென்னை மட்டை விலை திடீர் உயர்வு

சமையல் எரிவாயு மானிய சிலிண்டர் எண்ணிக்கை குறைப்பால், பல்லடம் கிராமப் பகுதியில் தென்னை மட்டை, தேங்காய் உரிமட்டை ஆகியவற்றின் விலை உயர்ந்துள்ளது.
ஆண்டுக்கு 6 சமையல் எரிவாயு சிலிண்டர் மட்டுமே மானியத்துடன் வழங்கப்படும் என்ற அறிவிப்பை மத்திய அரசு அமல்படுத்தியுள்ளது. மானியத்துடன் ஒரு சிலிண்டர் ரூ.400 என்றும், மானியம் இல்லாமல் ரூ.888 என்ற விலையிலும் விநியோகிக்கப்படுகின்றன. இதனால் ஆண்டுக்கு ரூ.3 ஆயிரம் கூடுதலாக செலவிட வேண்டிய நிலை உருவாகியுள்ளது. கிராமப் புறங்களில் சமையல் எரிபொருள் செலவைக் குறைக்க தென்னை மட்டை, தேங்காய் உரிமட்டை, விறகு போன்றவற்றை பயன்படுத்தத் துவங்கிவிட்டனர். இதன் காரணமாக முன் ரூ.1-க்கு விற்ற ஒரு தென்னை மட்டை விலை தற்போது 1.50-க்கும், 30 பைசாவிற்கு விற்ற தேங்காய் உரிமட்டை 50 பைசாவிற்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 42.97 அடி

பவானிசாகர் அணை நீர்மட்டம் புதன்கிழமை 42.97 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 260 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 175 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.96 டி.எம்.சி.

## அணையைத் திறந்தால் 12,543 ஏக்கர் பாசன வசதி பெறும்

சாத்தனூர் அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடும் பட்சத்தில், திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களைச் சேர்ந்த 12,543 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சாத்தனூர் அணை 119 அடி உயரம் கொண்டது. இதில், 7,321 மில்லியன் கன அடி தண்ணீரைத் தேக்கி வைக்கலாம். அணையில் வியாழக்கிழமை காலை 8 மணி நிலவரப்படி 89 அடி உயரத்துக்கு 2,342 மில்லியன் கன அடி தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நீரில், அடிப்படைத் தேவை, குடிநீர் திட்டங்களுக்கு வழங்க வேண்டிய நீர் அளவு, அணையில் ஏற்பட்ட மண் தூர்வினால் ஏற்பட்டுள்ள இழப்பு, நீர் ஆவியாதல் மூலம் ஏற்படும் இழப்பு ஆகியவற்றுக்காக மொத்தம் 1,364 மில்லியன் கன அடி தண்ணீர் தேவை. மீதமுள்ள 978 மில்லியன் கன அடி தண்ணீரை மட்டுமே அணையில் இருந்து பாசனத்துக்கு திறந்து விட முடியும்.

இதில், திருக்கோயிலூர் பழைய ஆயக்கட்டு பாசனப் பரப்புக்கான உரிமை நீர் 432 மில்லியன் கன அடி தண்ணீரை கண்டிப்பாக விட வேண்டும். இதன் மூலம் 5 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும்.

மீதமுள்ள 546 மில்லியன் கன அடி தண்ணீரை அணையின் இடது மற்றும் வலதுப்புற கால்வாய்கள் மூலம் பயன்பெறும் ஏரிகளுக்குத் திறந்து விடலாம்.

அணை திறப்பதன் மூலம் மொத்தம் 12,543 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும் என்று பொதுப்பணித்துறை நிர்வள ஆதார அமைப்பின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## வேளாண் உபகரண ங்கள் வழங்க ரூ.2.40 கோடி ஒதுக்கீடு: ஆட்சியர்

தருமபுரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் மானிய விலையில் வேளாண் உபகரணங்கள் வழங்க ரூ.2.40 கோடி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டம், பேரியல் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பவர் டில்லர், டிராக்டர், ரோட்டோ வேட்டர், களை எடுக்கும் இயந்திரம், விசைத் தெளிப்பான், தீவனப் புல் நறுக்கும் இயந்திரம், உழுவை இயந்திர உபகரணங்கள் ஆகியவற்றை மானியத்தில் வழங்க அரசு அறிவுறுத்தியுள்ளது.

இதற்காக தருமபுரி மாவட்டத்துக்கு ரூ.239.45 லட்சம் நிதி பெறப்பட்டுள்ளது. இதில், வியாழக்கிழமை 47 விவசாயிகளுக்கு பல்வேறு இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 4 பவர் டில்லர்கள், 7 ரோட்டோ வேட்டர் கருவிகள், 6 களை எடுக்கும் இயந்திரங்கள், 23 விசைத் தெளிப்பான்கள், 5 தீவனப் புல் நறுக்கும் கருவி, உழுவை இயந்திரம், டிராக்டர் என 47 உபகரணங்களை விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சியர் ஆர்.லில்லி. வழங்கினார்.

இவற்றின் மதிப்பு ரூ.28.22 லட்சம். இதில், அரசு மானியம் ரூ.8.66 லட்சமாகும்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ப. ராமர், வேளாண்மைப் பொறியியல் துறை செயற்பொறியாளர் கே. முருகேசன், வேளாண்மை இணை இயக்குநர் பி. மனோகரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

3rd jan 2013 P.M

**மீன் விலை உயர்வு**

காரைக்காலில் தொடரும் மாவட்ட மீனவர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்தால் மீன், நண்டு, இறால் விலை கடுமையாக உயர்ந்தது.
இலங்கை கடற்பரப்பில் குறிப்பிட்ட காலம் தமிழக, புதுவை மீனவர்கள் மீன்பிடித்துக்கொள்ளும் அனுமதியை மத்திய அரசு பெற்றுத்தர வேண்டுமென வலியுறுத்தி நடைபெறும் போராட்டம் புதன்கிழமை 3-வது நாளை எட்டியது.போராட்ட அறிவிப்புக்கு முன் கடலுக்குச் சென்ற அனைத்துப் படகுகளும் காரைக்கால், நாகை மீன்பிடித் துறைமுகத்திற்கு வியாழக்கிழமைக்குள் வந்துவிடுமாம்.புதன்கிழமை காலை வந்த விசைப்படகுகளில் மீன்களைக் காட்டிலும் நண்டு, இறால் பெருமளவு இருந்தன. இவற்றை லத்தில் பெறுவதற்கு முகவர்கள் போட்டிபோட்டனர். ஏற்றுமதிக்குரிய புள்ளி நண்டு கிலோ ரூ. 220-க்கும், சிங்க இறால் கிலோ ரூ.420-க்கும், கதம்ப இறால் கிலோ ரூ.650-க்கும், போர் இறால் கிலோ ரூ.450-க்கும் விலை போனது. இது கடந்த சில நாள்களைக் காட்டிலும் கிலோவிற்கு ரூ.150 அதிகம்.

## சொட்டுநீர்ப் பாசன பயன்பாடு: ஆட்சியர் ஆய்வு

சொட்டுநீர்ப் பாசன பயன்பாடு குறித்து புதுச்சத்திரம் ஒன்றியத்திலுள்ள விவசாய நிலங்களில் ஆட்சியர் டி.ஜகந்நாதன் புதன்கிழமை திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

தோட்டக்கலைத் துறை சார்பில் செயல்படுத்தப்படும் சொட்டுநீர்ப் பாசனத் திட்டத்தின் மூலம் நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் ஒன்றியம் பெரியகவுண்டம்பட்டியில் 3 ஏக்கர் பரப்பில் மரவள்ளி சாகுபடி, நவணி கிராமத்தில் 4 ஏக்கர் பரப்பில் மக்காச்சோளம் சாகுபடி, கடத்தாம் பட்டியில் 5 ஏக்கர் பரப்பில் வெங்காய சாகுபடி, கதிராநல்லூரில் 5 ஏக்கர் பரப்பில் நிலக் கடலை, வெங்காய சாகுபடி, நாட்டாமங்கலத்தில் 5 ஏக்கர் பரப்பில் மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்ய அரசு மானியத்துடன் சொட்டுநீர் பாசனம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணிகளை மாவட்ட ஆட்சியர் டி.ஜகந்நாதன் புதன்கிழமை ஆய்வு செய்தார். அப்போது, சம்மந்தப்பட்ட விவசாயிகளிடம் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க வழங்கப்பட்ட மானியத் தொகை, விவசாயிகளின் பங்காக செலுத்திய தொகை, பணம் செலுத்தியதற்கான ரசீது வழங்கப்பட்டதா என்பது குறித்து கேட்டறிந்தார். மேலும், சொட்டுநீர்ப் பாசனத்துக்கான குழாய் அமைத்துள்ள நிறுவனம் குறித்தும், குழாய்களின் தரம், அவற்றுக்கான உத்தரவாத காலம் குறித்தும் ஆய்வு செய்தார். மேலும், சொட்டுநீர் பாசனம் அமைத்ததன் மூலம் தண்ணீர் செலவும், சாகுபடி செலவும் குறைந்தது குறித்து விவசாயிகளிடம் கேட்டறிந்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சியர் கூறியது:

2012-ஆம் ஆண்டுக்கு நாமக்கல் மாவட்டத்தில் 900 ஹெக்டேரில் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்கப்பட்டுள்ளதன் மூலம் 1980 விவசாயிகள் பயன்பெறுகின்றனர். நிகழாண்டில் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க விவசாயிகளிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டு, வரிசைப்படி மானிய ஒதுக்கீட்டின் அடிப்படையில் வழங்கப்படும் என்றார் அவர்.

சார் ஆட்சியர் அஜய்யாதவ், வேளாண்மை துணை இயக்குநர் கதிரவன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கிருஷ்ணகுமார் உள்ளிட்டோர் உடன் சென்றனர்.

## வறண்ட மேட்டூர் அணைக்குள் பயிர் சாகுபடி

வறண்ட மேட்டூர் அணைக்குள் பயிரிடப்பட்ட ராகி பயிர்கள் தற்போது முளைவிட்டுள்ளன.

பருவ மழை பொய்த்ததாலும், காவிரியில் தண்ணீர் வரத்து குறைந்ததாலும் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்தது. இதனால், அணைக்குள் தண்ணீர் குளம்போலத் தேங்கியுள்ளது.

இதையடுத்து, அணையோரத்தில் வசிக்கும் விவசாயிகள் வறண்ட அணைப் பகுதிக்குள் உழவுப் பணிகளை மேற்கொண்டனர்.

பண்ணவாடி, கோட்டையூர், நாகமரை, ஒட்டனூர் பகுதிகளில் உள்ள அணையின் வறண்ட நிலத்தில் ராகி, எள், கம்பு, நிலக்கடலை ஆகிய வித்துகளை விதைத்தனர். தற்போது, ராகி பயிர் முளைவிட்டு அணையில் பசுமையாகக் காட்சியளிக்கிறது.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

04.01.2013 A.M

## கால்நடைகளுக்கு சிகிச்சை முகாம் கிராமங்களில் நாளை நடத்த முடிவு

திண்டுக்கல் : அரசினால் வழங்கப்பட்ட விலையில்லா ஆடுகள், பசுக்களுக்கான சிறப்பு சிகிச்சை முகாம் நாளை(டிச. 31) அனைத்து கிராமங்களிலும் நடத்தப்பட உள்ளது.

கடந்த ஆண்டு தமிழகத்தில் 12,000 ஏழை பெண்களுக்கு 12,000 பசுக்களும், ஒரு லட்சம் பயனாளிகளுக்கு மொத்தம் 4 லட்சம் ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

திண்டுக்கல் மாவட்டத்தில் மட்டும் கடந்த ஆண்டு 150 பசுக்கள், 16080 ஆடுகளை பயனாளிகள் பெற்று பயனடைந்தனர். இந்த ஆண்டு இதுவரை 50 பசுக்கள், 17420 ஆடுகள் ஏழைகளுக்கு தரப்பட்டுள்ளது.

இவைகளுக்கான சிறப்பு இலவச முகாம் அனைத்து கிராமங்களிலும் நாளை முதல் நடைபெற உள்ளது.

விலையில்லாஆடுகள், பசுக்களை பெற்றவர்கள் தங்கள் கால்நடைகளை முகாமிற்கு அழைத்து சென்று பரிசோதிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## வறட்சியை சமாளிக்க விவசாயிகளுக்கு யோசனை

குஜிலியம்பாறை : குஜிலியம்பாறை வட்டாரத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல், நிலக்கடலை, கரும்பு ஆகியன போதுமான மழை இல்லாத காரணத்திலும், நீர் ஆதாரம் குறைந்து வருவதாலும் பயிர்கள் சற்று வாடும் நிலையில் உள்ளது.

இந்த சூழ்நிலையில், பயிர்களை பாதுகாக்க வேளாண்மை உதவி இயக்குநர் ரவிபாரதி யோசனை தெரிவித்துள்ளார்.பொட்டாசியம் குளோரைடு 2 சதவீத கரைசல் தெளிப்பதின் மூலம் பயிர்கள் இலைவழியாக நீர் ஆவியாதல் குறைக்கப்படுகிறது. இதன் காரணமாக மகசூல் தரக்கூடி பூ , பிஞ்சுகள் உதிராமல் பயன்தரக்கூடிய அளவில் மகசூல் கிடைக்கும்.பயிறு வகை பயிர்களான துவரை, உளுந்து, பாசிப்பயறு, தட்டைப்பயிறு ஆகிவற்றில் பூக்கும் தருணம், 2 சதவீத டி.ஏ.பி., இலை வழி கரைசல் தெளிக்க சிபாரிசு செய்யப்படுகிறது. இதனால் ஏக்கருக்கு 100 கிலோ முதல் 150 கிலோ வரை கூடுதல் மகசூல் கிடைக்க செய்யும்.

மிக இக்கட்டடான சூழ்நிலையில், பாசன நீரை சிக்கனமாகவும் விரையமின்றியம் பயிர்களுக்கு கிடைத்திட ஏதுவாக தெளிப்பு நீர் கருவிகள்

மற்றும் மழை தூவுவான் ஆகியவை 50 சதவீத மானியத்தில் வழங்கப்பட உள்ளன.

மேலும் விபரங்களுக்கு வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை அனுகுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நெற்பயிரில் இலைப்பேன் தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

தென்காசி:"நெற்பயிரில் இலைப்பேன் தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்' பற்றி கீழப்பாவூர் வேளாண்மை உதவி இயக்குநர் நல்லமுத்துராஜா விளக்கம் அளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

""நெற் பயிரின் மகசூலை குறைப்பதில் பூச்சிகள் பெரும் பங்கு வகிக்கின்றன. இப்பூச்சிகளில் இலைப்பேன் முக்கியமானது. இது நெற்பயிரை நாற்றாங்காலிலும், நடவு செய்த வயலிலும் இரண்டு முதல் நான்கு வாரங்களுக்குள் உள்ள இளம் பயிர்களை தாக்குகிறது. அதிக வெப்பம் மற்றும் காற்றில் குறைந்த ஈரப்பதம் உள்ள காலங்களில் இத்ன தாக்குதல் அதிகமாக காணப்படும்.

இளங் குஞ்சுகளும், தாய்ப் பூச்சிகளும் இலைகளில் உள்ள சாற்றினை உறிஞ்சுவதால் இலைகள் வெளிர் மஞ்சள் நிறமாக மாறி விடுகின்றன. இலையின் நுனிகள் கருகி ஓங்கள் நடுநரம்பை நோக்கி சுரண்டு விடும். அவ்வாறு சுருண்ட இலைகளை விரித்து பார்த்தால் அவை மினுமினுப்பாக இருக்கும். மேலும் சுருண்ட இலைகளுக்குள் இளங் குஞ்சுகளையும் தாய்ப் பூச்சிகளையும் காணலாம். இதன் தீவிர தாக்குதலால் நாற்றாங்கால் பசுமை நிறமிழந்து தீய்ந்து விடும்.

இலைப்பேன் தாக்குதலை கண்டறிய உள்ளங்கையை நீரில் நனைத்து தாக்கப்பட்ட இலைகள் மேல் தடவினால் ஏராளமான இலைப்பேன்கள் கைகளில் ஒட்டுக் கொள்வதை காணலாம். இளங் குஞ்சுகள் வெளிறிய மஞ்சள் நிறத்துடனும், வளர்ச்சியடைந்த தாயப்பூச்சிகள் அடர்ந்த பழுப்பு நிறத்துடனும் காணப்படும். இதனுடைய மொத்த ஆயுட்காலம் இரண்டு வாரங்கள் ஆகும்.

ஆகவே அதற்குள் தகுந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடித்து இலைப்பேன் தாக்குதலில் இருந்து நெற் பயிரை பாதுகாப்பது அவசியம்.

இலைப்பேன்களை கட்டுப்படுத்த நாற்று முழுவதும் நீரில் மூழ்கும்படி ஓரிரு நாட்கள் நீரை நிறுத்தி வடித்தால் நாற்றுகளில் உள்ள இலைப்பேன்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டு விடும். நாற்றாங்காலில் மோனோகுரோட்டோபாஸ் 2 மில்லியை ஒரு லிட்டர் நீருடன் ஒட்டும் திரவம் ஒரு மில்லி கலந்து கைத்தெளிப்பான் கொண்டு காலை அல்லது மாலை வேளைகளில் இலைகளின் மீது நன்குபடும்படி தெளிக்க வேண்டும்.

நடவு வயலில் இலைப்பேன்களை கட்டுப்படுத்த பாஸ்போமிடான் ஏக்கருக்கு 120 மில்லி அல்லது மானோகுரோட்டோபாஸ் 200 மில்லி மருந்தினை தெளிக்க வேண்டும்" என வேளாண்மை உதவி இயக்குநர் நல்லமுத்துராஜா அறிக்கையில் கூறியுள்ளார்.

**ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரிக்க மானிய விலையில் இடுப் பொருட்கள் வழங்கல்**

தென்காசி:கீழப்பாவூர் வட்டாரத்தில் ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரிக்க மானிய விலையில் இடுப் பொருட்கள் வழங்கப்பட்டது.

வேளாண்மை துறை மூலம் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஊட்டமேற்றிய தொழு உரம், பண்ணை கழிவு உரம் தயாரிக்க 50 சதவீதம் மானிய விலையில் இடுப் பொருட்கள் மற்றும் தொழு உரக்குழி அமைப்பு செலவிற்கான வேலையாட்கள் கூலி ஆயிரத்து 500 ரூபாய் வழங்கப்படுகிறது.

கீழப்பாவூர் வட்டாரத்தில் அமைக்கப்பட்டுள்ள ஊட்டமேற்றிய தொழு உரம் செயல் விளக்க திடல்களை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சவுந்தரராஜன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது அவர் செயல் விளக்க திடல்கள் அமைத்த விவசாயிகளுக்கு இடுப் பொருட்களான சூப்பர் பாஸ்பேட், யூரியா, சூடோமோனஸ், உயிர் உர பொட்டலங்கள் ஆகியவற்றை வழங்கினார். வேளாண்மை உதவி இயக்குநர் நல்லமுத்துராஜா ஊட்டமேற்றிய தொழு உரத்தின்

பயன்கள் பற்றி பேசினார்.

வேளாண்மை அலுவலர் ராமர் ஊட்டமேற்றிய உரம் தயாரிப்பு செயல் விளக்கம் செய்து காட்டினார். நிகழ்ச்சியில் துணை வேளாண்மை அலுவலர் நமச்சிவாயம், உதவி வேளாண்மை அலுவலர்கள் கனிராஜா, அப்துல்கரீம், கழுநீர்குளம் பஞ்.,தலைவர் ஆண்டபெருமாள், துணைத் தலைவர் காளிமுத்து மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## சிறுகிழங்கு விளைச்சல் அமோகம் ஆழ்வார்குறிச்சி விவசாயிகள் உற்சாகம்

சிறுகிழங்கு விளைச்சல் அமோகம் ஆழ்வார்குறிச்சி விவசாயிகள் உற்சாகம்ஆழ்வார்குறிச்சி: ஆழ்வார்குறிச்சி சுற்று வட்டார, பகுதிகளில் சிறுகிழங்கு விளைச்சல் அதிகரித்து, நல்ல விலைக்கு விற்கப்படுவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சிறுகிழங்கு மிகவும் முக்கியத்துவம் பெறும். சிறுகிழங்கு நெல்லை மாவட்டத்தில் ஆழ்வார்குறிச்சி, பாப்பான்குளம், கடையம், வெள்ளிகுளம், சம்பன்குளம், ரவணசமுத்திரம், வீராசமுத்திரம், கீழாம்பூர், காக்கநல்லூர் உட்பட சுற்று வட்டார பகுதிகளில் அதிகளவு பயிரிடப்படுகிறது. ஆடி மாதங்களில் சிறுகிழங்கு விதை விவசாயிகள் நடுவர். சுமார் 3 மாத காலத்திற்கு சிறுகிழங்கு நாற்று முளைத்து அதனை எடுத்து பின்னர் தனியாக நட்டு வைப்பதால் சிறுகிழங்கு பயிராகும். ஆவணி மாதம் பயிரிடப்படும் சிறுகிழங்கு கார்த்திகை, மார்கழி மாதங்களில் மகசூல் ஆகும். பொங்கல் நாளில் விவசாயிகள் மட்டுமின்றி அனைவரும் சிறுகிழங்கை அதிகளவு பயன்படுத்துவர். தற்போது ரவணசமுத்திரம் மற்றும் கடையம் சுற்று வட்டார பகுதிகளில் விளையும் சிறுகிழங்கு சென்னை மட்டுமல்லாமல் ஐதராபாத், மும்பை, கேரளாவிற்கும் அதிகளவில் ஏற்றுமதியாகிறது. வெளிமாநிலங்களில் இருந்து வியாபாரிகள் நேரடியாக விவசாயிகளிடம் வந்து கொள்முதல் செய்வதால் தற்போது சிறுகிழங்கிற்கு நல்ல விலை உள்ளது. கடந்த ஆண்டுகளில் 10, 15 ரூபாய்க்கு விற்ற சிறு

கிழங்கு தற்போது வியாபாரிகளுக்கு முதல் தர கிழங்கு கிலோ ஒன்றிற்கு ரூ.25, நடுத்தர கிழங்கு ரூ.15,பொடிக் கிழங்கு ரூ.10 ஆகிய விலைகளில் கிடைக்கிறது. வியாபாரிகள் முறையே கிலோ ஒன்றிற்கு ரூ.30, ரூ. 20,ரூ.15 என்ற விலையில் விற்று வருகின்றனர்.

தினமும் பொட்டல்புதூர், கடையம் பகுதிகளில் இருந்து சென்னை செல்லும் ஆம்னி பஸ்களில் சிறுகிழங்கு மூடை மூடையாக கொண்டு செல்லப்படுகிறது.

## எட்டாத உயரத்திற்கு பறக்கும் அரிசிவிலை...சாமானியர்கள் அதிர்ச்சி.

தூத்துக்குடி: தமிழ்நாட்டில் கடந்த இரண்டு மாதங்களாக அரிசிவிலை கிடுகிடுவெனஉயர்ந்து வருகிறது. கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு கிலோ.35 ரூபாய்க்கு விற்ற கர்நாடக பொன்னி அரிசி தற்போது 46 ரூபாய்க்கு விற்று வருகிறது.இதனால் நடுத்தர மக்கள் மற்றும் ஏழை மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர். உடனடியாக அரிசிவிலையை குறைக்க மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தியாவில் கோடிக்கணக்கான விவசாய மக்கள் ஒரு காலத்தில் வாழ்ந்த வந்த நிலையில் விவசாயத் தொழில் கொடிகட்டி பறந்து வந்தது. நமது நாட்டிலுள்ள நஞ்சை, புஞ்சை விவசாய நிலங்களில் நெல், வாழை, பருத்தி, காய்கறிகள், பழச்செடிகள், தானிய வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள், பழமரங்கள் போன்றவை பலகோடி ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டு வருகின்றன.

அன்றுள்ள காலகட்டத்தில் நமது நாட்டில் விவசாயம் ஓஹோவென்று இருந்தநிலையில் அந்நிய நாடுகள் நம்நாட்டில் இருந்து விவசாயப் பொருட்களை தங்கள் நாடுகளுக்கு விலைகொடுத்து வாங்கிச்சென்றனர். ஆனால் இன்றுநமது நாட்டில் தற்போது விவசாயம் சரிவர இல்லாத நிலையில் விவசாய உற்பத்திப்பொருட்களின் விளைச்சலும் பலகோடி டன் மதிப்பில் இருந்து குறைந்துகொண்டே வருகிறது. இதனால் நாம் விவசாய விளைபொருட்களை வெளிநாடுகளில் இருந்து அதிகவிலை கொடுத்து வாங்கிப் பயன்படுத்தும் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

உயரும் விலைவாசி உயர்வு : இதுபோன்ற பிரச்னைகளால் இன்று விலைவாசி உயர்வு விண்ணைத்தொடும் வகையில் நாளுக்கு நாள் உயரஉயர பறந்துகொண்டே செல்கிறது. ""நேற்று இருந்த விலை இன்று இல்லை, இன்று இருந்த விலை நாளை இல்லை, நாளை இருக்கும் விலை அதற்கு அடுத்தநாள் இல்லை'' என்பதற்கேற்ப உணவுப்பொருட்களின் விலை கிடுகிடுவென உயர்ந்து கொண்டே செல்கிறது. அதிரடியாக அதிகரித்து வரும் விலைவாசி உயர்வால் ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்களின் வாழ்க்கை கேள்விக்குறியாகியுள்ளது.

கிடைக்கின்ற குறைந்த வருவாயில் குடும்ப வண்டியை ஒரு மாதம் ஓட்டுவதற்குள் குடும்பத்தலைவர்கள் படாதபாடுபட்டு வருகிறார்கள். பண வீக்கம், பொருளாதார சிக்கல்கள், உணவுபொருட்கள் போதிய அளவில் விளைச்சல் இல்லாமை, இயற்கை சீரழிவுகள் போன்ற பல்வேறு காரணங்களால் பொருட்களின் விலையானது விலைவாசி உயர்வு பறந்துகொண்டே வருகிறது.

ஒரு லிட்டர் பால் விற்கும் விலைக்கு, ஒரு லிட்டர் தண்ணீர் விற்கும் நிலை இன்று வந்துவிட்டது.

இந்தியாவை பொறுத்தவரை அனைத்து மாநில மக்களும் விலைவாசி உயர்வால் இன்னலுக்கு உள்ளாகிதான் வருகிறார்கள். அதிக அளவில் விவசாய நிலங்கள் இருந்தாலும் விவசாய மானது சில லட்சம் ஏக்கர் பரப்பளவிலே நடக்கிறது. இதனால் உணவுபொருட்களின் உற்பத்தி குறைந்துகொண்டே வருகிறது.

விவசாய நிலத்தில் முளைக்கும் வீடுகள் : தமிழகத்தில் நடந்துவரும் விவசாயத்தை பொறுத்தவரை நெல், வாழைப் பயிர்களே அதிகஅளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தமிழகத்தில் உற்பத்தியாகும் நெல் இந்தியா முழுவதும் மட்டுமின்றி உலக நாடுகளுக்கும் ஏற்றுமதியாகி வருகிறது. இப்படிப்பட்ட சூழலில் தற்போது தமிழகத்திலும் விவசாயம் கேள்விக்குறியாகி வருகிறது. தமிழகத்திலுள்ள விவசாய நிலங்களில், விவசாய உணவுப்பயிர்கள் விளைவதற்கு பதிலாக கான்கிரீட் வீடுகள் தான் முளைத்து வருகின்றன. இதுமட்டுமா இன்னும் இருக்கு என்று சொல்லும் வகையில் வீடுகள் கட்டும் இடங்கள் போக மீதமுள்ள விவசாய நிலங்கள் எல்லாம் "பிளாட்டுகள்' போட்டு விற்பனை செய்யப்பட்டும் வருகிறது. விவசாய நிலங்கள் எல்லாம் பிளாட்டுகளாக மாறிவரும் நிலையில் தமிழகத்தில் நிலம் விலை இதுதான் நிச்சயமான விலை என்று சொல்லமுடியாத அளவிற்கு உயர்ந்து கொண்டே போகிறது. ஒன்றுக்கும் ஆகாத வறண்ட நிலங்கள் கூட இன்று பல லட்ச ரூபாய்க்கு விற்கப்பட்டு வருகிறது. இப்படி விவசாய நிலங்கள் எல்லாம் பிளாட்டுகளாக மாறிவருவதால், போதிய அளவில் விவசாயம் செய்வதற்கு வசதியில்லாமல் சிரமப்பட்டு வரும் பலவிவசாயிகள் தங்களின் நிலங்களை நிலத்தரகர்கள் கேட்கும் விலைக்கு விற்றுவருகின்றனர். இதனால் விவசாயம் என்பது பல சதவீதம் குறைந்துவிட்டது.

குறைந்துவரும் நெல் உற்பத்தி : தற்போதுள்ள சூழ்நிலைகளில் அண்டை மாநிலங்கள் தமிழகத்திற்கு தண்ணீர் தர மறுப்பது, மாவட்டத்திற்குள்ளே தண்ணீருக்கு தகராறு, விவசாய விளைபொருட்களுக்கு போதிய விலையில்லாதது, விவசாய பொருட்களிகளின் உற்பத்தி செலவு உயர்வு, விவசாய வேலைக்கு போதிய ஆட்கள் இல்லாதது, உரங்கள் தட்டுப்பாடு, விவசாயத் தொழிலாளர்களின் கூலி உயர்வு போன்ற பல்வேறு காரணங்களால் விவசாயத் தொழில் வீரியம் இல்லாமலே நடந்து வருகிறது. இவ்வளவு கஷ்டப்பட்டு விவசாயிகள் விளைபொருட்களை உற்பத்தி செய்தாலும் சிலநேரங்களில் சூறாவளிக்காற்று, புயல், மழை, வெள்ளம், வறட்சி போன்ற இயற்கையின் சீரழிவுகளிலும் சிக்கி விவசாய விளைபொருட்கள் யாருக்கும் பயன்இல்லாமல் சீரழிந்து போய் விடுகின்றன. இதனால் கஷ்டப்பட்டு கடன் வாங்கிய பணத்தை போட்டு விவசாயம் செய்த விவசாயிகள் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டு விடுகின்றனர். இதனால்

விவசாயிகளின் கடன் சுமை அதிகமாகி விடுகிறது. இதுபோன்ற பல்வேறு காரணங்களால் கடன்சுமை அதிகமாகி தற்கொலை செய்துகொண்டு வரும் விவசாயிகளின் எண்ணிக்கை தமிழகத்தில் சமீபகாலமாக அதிகரித்து வருகிறது என்று புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

அதிகரித்துவரும் அரிசி விலை : தமிழகம் முழுவதும் விவசாய விளைபொருட்கள் உற்பத்தியில் ஒட்டுமொத்தமாக நெல் விளைச்சல் குறைந்துகொண்டே வருகிறது. குறைந்துவரும் நெல் உற்பத்தியால் தற்போது அரிசிவிலை அதிகரித்துக்கொண்டே வருகிறது. மேலும் உரங்கள், விவசாயத்தொழிலாளர்களின் கூலி, இயந்திரங்களின் வாடகை உயர்வு போன்ற பல்வேறு காரணங்களாலும் அரிசியின் விலை அதிகரித்துக்கொண்டே வருகிறது. தென்மாநில மக்கள் பெரும்பாலும் மூன்றுநேரமும் அரிசியிலான உணவுப்பொருட்களையே சாப்பிட்டு வருவதால் இம்மக்களுக்கு அரிசி அத்தியாவசிய தேவையாகிறது. இப்படி தேவை அதிகமாக இருக்கும் பட்சத்தில் அரிசி உற்பத்தி குறைவாக இருப்பதால் விலை உயர்வு என்பது தவிர்க்கமுடியாத ஒன்றாகி விடுகிறது. சமீபகாலமாக அரிசி விலை உயர்வானது கிலோவுக்கு 5 ரூபாய் முதல் அதிகரித்துக்கொண்டே வருகிறது. ஒரு கிலோ அரிசி 46 ரூபாய்க்கு குறையாமல் விற்கப்பட்டுவரும் நிலையில் இப்படி விலை உயர்ந்துகொண்டே வருவது எங்குபோய் நிற்குமோ என்பதும் தெரியவில்லை.

குமரி மாவட்டத்தில் உற்பத்தி குறைந்தது: குமரி மாவட்டத்தில் சம்பா அரிசி விலை அதிக அளவில் உயர்ந்துள்ளதால் அரிசி வியபாரிகள் சம்பா அரிசி கொள்முதல் செய்து விற்பனை செய்ய தயக்கம் காட்டி வருகின்றனர். இதனால் வரும் பொங்கலுக்கு சம்பா அரிசி தட்டுப்பாடு ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் கடந்த ஆண்டு(2012) போதிய மழை பெய்யாததால் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் வறட்சி ஏற்பட்டுள்ளது.குறிப்பாக காவிரி டெல்டா மாவட்டங்களில் தண்ணிர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் பயிர்கள் தண்ணீரின்றி கருகும் நிலை ஏற்பட்டுள்ளது.பல்வேறு பகுதிகளில் சம்பா பயிர்கள் கரிந்துள்ளதால் விவசாயிகள் தற்கொலை செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. கருகும் பயிர்களை காப்பாற்ற கர்நாடகத்திலிருந்து தண்ணீர் திறந்து விடக்கோரி தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்தி வருவதுடன் பல்வேறு அமைப்புகளும் இதற்காக போராடி வருகின்றனர். இந்நிலையில் மாநிலத்தின் பல மாவட்டங்களில் அரிசி விலை பல மடங்கு உயர்ந்துள்ளது.தமிழகத்தின் நெற்களஞ்சியங்களில் ஒன்றான குமரி மாவட்டத்தில் மழை இல்லாத காரணத்தால் பாசன அணைகளில் போதிய தண்ணீர் இல்லததால் கடந்த கன்னிப்பூவில் பெரும்பான்மை பகுதிகளில் பயிர்

செய்யப்படவில்லை.இதனால் அறுவடையின் போது நெல் விலை கணிசமான நிலையில் இருந்தது. இதனால் உற்சாகமடைந்த விவசாயிகள் அறுவடையின் போது உடனுக்குடன் நெல்லை விற்பனை செய்து விட்டனர். கொஞ்சம் கொஞ்சமாக இருந்த நெல்லையும் அவ்வப்போது விற்பனை செய்து விட்டதால் தற்பொழுது மாவட்டத்தில் எந்த பகுதியிலும் நெல் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.இதனால் கோட்டாறு பகுதியிலுள்ள எந்த மில்களுக்கும் நெல்வரத்து இல்லாமல் வெளிமாவட்டங்களிலும், வெளி மாநிலங்களிலிருந்தும் நெல், அரிசி கொள்முதல் செய்கின்றனர்.

சன்ன ரகங்கள் மற்றும் மோட்டா ரகங்கள் ஆந்திரா,ஓடிசியா,மற்றும் மேற்கு வங்காளம் மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு நமது மாநிலத்தின் பல பகுதிகளிலுமுள்ள மார்டன் ரைஸ் மில்களுக்கு அனுப்பபடு கிறது.கர்நாடக மாநிலம்,மற்றும் தமிழகத்தில் மதுரை, விழுப்புரம் போன்ற மாவட்டங்களிலிருந்து பொன்னி,வெள்ளைப்பொன்னி ரகங்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன.மேலும் ஒடிசியா மாநிலத்திலிருந்து கிராந்தி என்ற நெல் வகை கொள்முதல் செய்யப்பட்டு பின்னர் அரிசியாக்கப்பட்டு செங்கல்பட்டு ரகங்களாக விற்பனை செய்யப்படுகிறது. இவ்வாறு பல்வேறு மாநிலங்களிலிருந்தும், மாவட்டங்களிலிருந்தும் அரிசி கொள்முதல் செய்து விற்பனை செய்து வருவதால் அரிசி விலை அதிகரித்துள்ளது.தற்பொழுது தூத்துக்குடி மாவட்டத்தில் பொன்னி ரகங்கள் 32 ரூபாய் முதல் 46 ரூபாய் வரையிலும்,டொப்பி 29 ரூபாய் முதல் 32 ரூபாய் வரையிலும், செங்கல்பட்டு 33 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.அம்பை 16 போன்ற சம்பா ரகங்கள் மாநிலத்தின் எந்த பகுதியிலும் கிடைக்காததால் டி.கே.9 போன்ற சம்பா ரகங்களை மக்கள் பயன் படுத்துவது வழக்கம். இந்நிலையில் அம்பை 16 ரகம் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் டி.கே.9 விலை அதிகரித்துள்ளது.கடந்த பொங்கலின் போது 26 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட டி.கே.9 தற்பொழுது 36 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனால் பொதுமக்கள் இந்த அரிசியை வாங்க தயங்கி வருகின்றனர். பொங்கலுக்கு சம்பா அரிசி தட்டுப்பாடு ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது

அவசர நடவடிக்கை அவசியம் : மத்திய, மாநில அரசுகள், பாங்க் நிர்வாகத்தினர், வேளாண்மைத்துறை அதிகாரிகள், வருவாய்த்துறை அதிகாரிகள் பாதிக்கப்பட்ட நலிந்த விவசாயிகள் பயன்பெறும் வகையில் திட்டங்களை வகுத்து முனைப்புடன் செயல்படுத்தவேண்டும். அத்துடன் இயற்கை சீரழிவுகளால் பாதிப்பிற்குள்ளாகும் விவசாயிகளுக்கு உரிய நிவாரணத்தை காலம் தாழ்த்தாமல் உடனடியாக வழங்கிட வேண்டும். மேலும் விவசாயிகளுக்கு தேவையான விதைகள், இடுபொருட்கள், உரம் போன்றவற்றை மானிய

விலையில் வழங்கவேண்டும். உற்பத்தியாகும் விவசாய விளைபொருட்களை விவசாயிகளை ஏமாற்றி குறைந்த விலைக்கு வாங்கி கொள்ளை லாபம் பார்க்கும் இடைத்தரகர்களை முற்றிலுமாக ஒழித்திட விவசாய விளை பொருட்களை அரசே நல்ல விலை நிர்ணயித்து கொள்முதல் செய்யவேண்டும். இதற்கெல்லாம் மேலாக விவசாய நிலங்கள் குடியிருப்புகளாக மாறிவருவதற்கு தடை விதிக்கவேண்டும். விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் அவர்களுக்கு ஊக்கத்தொகைகள், வயதான காலத்தில் உதவித்தொகை, வீட்டுமனைப்பட்டா, அவர்களின் குழந்தைகளுக்கு கல்விபயில கடன், இலவச மருத்துவவசதி போன்ற தேவையான வசதிகளை எல்லாம் முறையாக செய்துகொடுப்பதிலும் அரசு உரிய கவனம் செலுத்தவேண்டும். இல்லையென்றால் வருங் காலத்தில் சுகர் பேஷண்ட்டுகள் மட்டுமல்ல யாருமே அரிசி சாதம் சாப்பிட முடியாது என்கிற நிலை உருவானாலும் ஆச்சரியப்படு வதற்கில்லை

கொய்மலர் சாகுபடியை ஊக்குவிக்க எதிர்பார்ப்பு : ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் அவசியம்

ஊட்டி : "நீலகிரியில், கொய்மலர் சாகுபடி தொழிலை மேம்படுத்தும் திட்டத்தை, தொய்வில்லாமல் தொடர்வதற்குரிய நடவடிக்கையை, முதல்வர் முடுக்கிவிட வேண்டும்' என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

நீலகிரியின் பிரதான தொழிலான தேயிலை சாகுபடி, கடந்த 2000ம் ஆண்டுகளில் நலிவடைய துவங்கியது. தேயிலைக்கு மாற்றாக, கொய்மலர் சாகுபடி அறிமுகப்படுத்தப்பட்டது.

பல கோடியில் திட்டம்

கடந்த 2003ல், மாநில முதல்வராக இருந்த ஜெயலலிதா, கொய்மலர் சாகுபடியை நீலகிரியில் பிரபலப்படுத்த, பல திட்டங்களை அறிவித்தார்; வங்கி கடன்கள் எளிமையாக்கப்பட்டன.

தோட்டக்கலை துறை மூலம், கார்னேஷன், லில்லியம், ஜெர்பரா உட்பட கொய்மலர் சாகுபடி ஊக்கவிப்பட்டது. 100க்கணக்கான விவசாயிகள் எளிதாக வங்கி கடன், தோட்டக்கலை துறை மானியம் பெற்று பசுமைக் குடில் அமைத்து, கொய்மலர் சாகுபடியை துவங்கினர்.

கடந்த 2003, செப்.,13ம் தேதி, ஊட்டி சேரிங்கிராஸ் பகுதியில், எச்.ஏ.டி.பி., திட்டத்தின் கீழ், ஒரு கோடி ரூபாயில், அரசு தோட்டக்கலை கட்டட வளாகம் அமைக்கப்பட்டது. இங்கு, கொய்மலர் உட்பட மலைக் காய்கறி, தோட்டப் பயிர் சாகுபடி, மார்க்கெட்டிங்கை ஊக்கவிக்க ஆலோசனை மையம், மாதிரி பசுமைக் குடில், மலர் ஏற்றுமதி மையம், குளிர்பதன வசதி உட்பட, சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன.

திட்டத்தில் தொய்வு

ஆட்சி மாற்றத்துக்கு பின்பு, கொய்மலர் சாகுபடியில் தொய்வு ஏற்பட துவங்கியது. விவசாயிகள் பலரால் தொழிலை தொடர முடியாமல், வங்கி கடன் தவணையை திருப்பி செலுத்த முடியாமல் திணறினர். அரசு தோட்டக்கலை துறை மூலம் செயல்பட்டு வந்த மலர் ஏற்றுமதி மையமும் செயல்பாடற்று போனது.

பல கோடி ரூபாய் செலவில், முதல்வரால் திறந்து வைக்கப்பட்ட, தோட்டக்கலை கட்டடம் செயல்பாடிழந்து, வெறும் காட்சி பொருளாக மாறியுள்ளது. மலர் சாகுபடியில், பெரிய விவசாயிகள், தங்கள் தொழிலை தொடர, சிறு, குறு விவசாயிகள் பலர், தொழிலை கைவிட்டனர்.

மீண்டும் திட்டம்

"மலர் செடிகளில், எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்கவில்லை. இஸ்ரேல் உட்பட நாடுகளில் இருந்து மலர் விதைகளை இறக்குமதி செய்து, சாகுபடியாளர்களுக்கு விற்று வந்த ஏஜன்டுகள், தரமற்ற விதைகளை வழங்கியது தான், மகசூல் குறைய காரணம், என சிறு, குறு மலர் சாகுபடியாளர்கள் சங்கத்தினர், ஆதாரத்துடன் அரசு கவனத்துக்கு கொண்டு சென்றனர். விளைவாக, நீலகிரி மாவட்ட விவசாயிகள், தோட்டக்கலை துறையினர் இணைந்து, கொய்மலர் நாற்று விதை உற்பத்தி மையத்தை துவக்க, 1.40 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. திட்டத்தை, நடைமுறைக்கு கொண்டு வரும் ஆரம்ப கட்டப்பணிகள் துவங்கியுள்ளன.

தொய்வில்லாமல் தொடர வேண்டும் நீலகிரியில், சிறு, குறு தேயிலை விவசாயிகள் பயனடைந்து வரும் "இன்ட்கோ' கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளை மேம்படுத்தும் நோக்கில், மாநில முதல்வர் இன்று, குந்தா கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை பொன்விழாவில் பங்கேற்கிறார். "இன்ட்கோ' மூலம் உற்பத்தியாகும் தேயிலை தூளை, ஆவின் பாலகங்களில் விற்கும் திட்டத்தையும் துவக்கி வைக்கிறார். இதன் மூலம் "இன்ட்கோ' தொழிற்சாலையில், உறுப்பினர்களாக உள்ள சிறு, குறு தேயிலை விவசாயிகள் பயன்பெறுவர், என எதிர்பார்க்கப்படுகிறது.

"இதே போன்று, நலிவடைந்துள்ள கொய்மலர் சாகுபடியை மேம்படுத்த, முதல்வரின் ஒப்புதலுடன் வரவுள்ள நாற்று கம்பெனி திட்டமும், அதை தொடர்ந்து நடக்கவுள்ள மலர் சாகுபடியும் சரியான முறையில் நடக்க, பிரத்யேக அதிகாரிகள் குழுவை நியமிக்க வேண்டும். மீண்டும் தொழிலில் தொய்வு ஏற்படாமல் இருக்க, மாநில முதல்வர் நேரடியாக கண்காணிக்க வேண்டும்' என்பதே, சிறு, குறு மலர் சாகுபடியாளர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

## மாநில அளவிலான பயிற்சிக்கு விவசாயிகள் சுற்றுலா புறப்பாடு

திருவெண்ணெய்நல்லூர் : திருவெண்ணெய்நல்லூர் பகுதி விவசாயிகள் மாநில அளவிலான பயிற்சிக்கு சுற்றுலா சென்றனர்.

திருவெண்ணெய்நல்லூர் வட்டார விவசாயிகள் அட்மா திட்டத்தின் கீழ் மாநில அளவிலான பயிற்சிக்கு சுற்றுலா சென்றனர். இவர்கள் சென்ற பஸ்சை, அட்மாகுழு வட்டார தலைவர் சேகர் கொடியசைத்து வழியனுப்பி வைத்தார்.

சுற்றுலா செல்லும் குழுவில் 50 விவசாயிகள் பங்கேற்றனர். இவர்கள் குமலூர் வேளாண் பொறியியல் கல்லூரி, சிறுகமணி கரும்பு ஆராய்ச்சி நிலையம், நாமக்கல் கால்நடை பல்கலைக்கழகம், மோகனூர், துவாக்குடி வேளாண் கல்லூரி மற்றும் தோகைமலை வாழை ஆராய்ச்சி நிலையத்தில் பயிர் சாகுபடி குறித்தும், தொழில்நுட்பங்கள் குறித்தும் பயிற்சி பெறுகின்றனர்.

உதவி வேளாண் அலுவலர் பிரசன்னராஜ் விவசாயிகளை அழைத்துச் சென்றார்.

வழியனுப்பும் நிகழ்ச்சியில் வேளாண் உதவி இயக்குனர் இளவரசன், முருகதாஸ், மணிகண்டன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## சாகுபடிக்கான ஆதார நெல் விதை உற்பத்தி: மேட்டூர் அணை நீர்மட்டம் சரிவால் பாதிப்பு

மேட்டூர்: விவசாயிகள் சாகுபடி செய்வதற்காக, வேளாண்துறை மூலம், ஆதார நெல் உற்பத்தி செய்து வழங்கப்படுகிறது. மேட்டூர் அணை நீர்மட்டம் சரிந்ததால், மேட்டூர் வேளாண் நெல் விதை பண்ணையில், ஆதார நெல் உற்பத்தி பாதித்துள்ளது.

வேளாண்துறை சார்பில் உற்பத்தி செய்து வழங்கும் விதைநெல் தரமானதாகவும், அதை சாகுபடி செய்வதன் மூலம் நெல் உற்பத்தி கூடுதலாக இருக்கும் என, விவசாயிகள் நம்புகின்றனர். சம்பா, குறுவை, தாளடி நெல் சாகுபடி செய்யும் பெரும்பாலான விவசாயிகள், வேளாண்துறை உற்பத்தி செய்து வழங்கும் விதை நெல்லை வாங்கி விதைப்பது வழக்கம்.

சேலம் மாவட்டத்துக்கான விதைநெல் தேவையை பூர்த்தி செய்வதற்காக வேளாண்துறை சார்பில் மேட்டூர், டேனீஸ்பேட்டை ஆகிய இரு இடங்களில் விதைபண்ணை அமைக்கப்பட்டுள்ளது. இதில், மேட்டூர் விதைபண்ணையில், 40 ஏக்கர் நிலம் உள்ளது. நிலத்தில் வேளாண் பல்கலை வழங்கும் நெல் கருவிதையை வாங்கி சாகுபடி செய்யப்படும்.

இதன்மூலம் ஆதார நெல்விதை-1 உற்பத்தி செய்யும் நெல், சேலம் வேளாண் விரிவாக்க மையங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். ஆதார நெல்விதையை வேளாண் அதிகாரிகள்

சுற்றுப்பகுதியில் குறிப்பிட்ட ஏக்கரில் சாகுபடி செய்து, ஆதார நெல்விதை-2 உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு அரசு நிர்ணயம் செய்த விலையில் வழங்குகின்றனர்.

மேட்டூர் கால்வாயில் ஆண்டுதோறும், ஆக.,1 முதல், டிசம்பர், 15 வரை, பாசனத்துக்கு நீர்திறக்கப்படும். இந்த நீரை பயன்படுத்தி மேட்டூர் அரசு விதைபண்ணையில் ஆண்டுதோறும், 40 ஏக்கரில், ஏ.டி.டி.,45, 39, வெள்ளை பொன்னி ரக கருவிதை சாகுபடி செய்து, ஆதார விதை-1 உற்பத்தி செய்யப்படும். நடப்பாண்டு மேட்டூர் கால்வாயில் பாசனத்துக்கு நீர்திறக்கவில்லை. மேட்டூர் அரசு விதைப்பண்ணையில் ஆதார நெல் விதை உற்பத்தி பாதித்துள்ளது. ஆதாரநெல் விதை உற்பத்தி செய்யாவிடில் வரும் ஆண்டில் விதைநெல் தட்டுப்பாடு ஏற்படும் என்பதால், நடப்பாண்டு அணையில் இருந்து கால்வாயில் வெளியேறும் கசிவுநீரை தேக்கி வைத்து, அந்த நீரை பாசனத்துக்கு பயன்படுத்தி ஆதாரநெல்விதை உற்பத்தி செய்யப்படுகிறது.

கடந்த சில ஆண்டுகளாக பாசனத்துக்கு போதுமான நீர் கிடைத்ததால், விதைபண்ணையில் ஒரே நேரத்தில், 40 ஏக்கர் நிலத்திலும் கருவிதை நெல் சாகுபடி செய்யப்பட்டது. நடப்பாண்டு நீர்பற்றாக்குறை காரணமாக மூன்று கட்டங்களாக பிரித்து நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதனால், ஒரேசமயத்தில் விதைபண்ணையில் ஒருபுறம் விதைநெல் நாற்று வளர்ந்து பச்சை பசேல் என காட்சியளிக்கிறது. மற்றொரு புறம் வயலில் முதிர்ந்து அறுவடைக்கு தயாராக வளர்ந்து நிற்கிறது. மற்றொரு இடத்தில் நெல் அறுவடை செய்த நிலையில், மீண்டும் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. நீர் பற்றாக்குறையால் நடப்பாண்டு மேட்டூர் விதைபண்ணையில் விதைநெல் உற்பத்தியும் குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

## காவிரியில் தண்ணீர் நிறுத்தம் வாழை பயிர் கருகும் அபாயம்

ப.வேலூர்: மேட்டூர் அணையில் தண்ணீர் நிறுத்தப்பட்டதால், ப.வேலூர், மோகனூர் சுற்றுவட்டாரத்தில், ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்ட வாழை, வெற்றிலை மற்றும் கரும்பு ஆகியவை கருகும் அபாயம் உள்ளது.

கர்நாடகா அணையில் தண்ணீர் திறந்து விடாதது, பருவ மழை பொய்த்துப் போனது ஆகியவற்றால், மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடுவது நிறுத்தப்பட்டது. அதனால், காவிரில் தண்ணீர் வரத்து குறைந்து வருகிறது.

காவிரி நீரை நம்பி, நாமக்கல் மாவட்டம், ஜேடர்பாளையம், ப.வேலூர் துவங்கி, மோகனூர் வரை, ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் வாழை, வெற்றிலை மற்றும் கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இவற்றின் பாசனத்திற்கு, ஜேடர்பாளையம் காவிரி ஆற்றில் இருந்து பிரியும்

ராஜவாய்க்கால் மூலம் தண்ணீர் விடப்படுகிறது.

இந்நிலையில், காவிரியில் தண்ணீர் குறைந்து வருவதால், ராஜ வாய்க்காலிலும் தண்ணீர் மட்டம் குறையத் துவங்கியுள்ளது. அதனால், ப.வேலூர், மோகனூர் பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள வாழை, வெற்றிலை மற்றும் கரும்பு பயிர் ஆகியவை கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இது, அப்பகுதி விவசாயிகள் மத்தியில், பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## பருத்தி பஞ்சு எடுக்கும் கருவி: வேளாண் துறை செயல்விளக்கம்

தர்மபுரி: பருத்தியில் பஞ்சு எடுக்கும் கருவியை வேளாண் துறை அறிமுகம் செய்து வைத்து, பஞ்சு எடுக்கும் செயல்முறை விளக்கம் விவசாயிகளுக்கு, வேளாண் துறை மூலம் செய்து காண்பிக்கப்பட்டது.

தர்மபுரி மாவட்டத்தில், குளிர்கால பருத்தி, 37 ஆயிரம் ஏக்கரில் பயிர் செய்யப்பட்டு, தற்போது அறுவடை பணிகள் நடந்து வருகிறது. பருத்தி சாகுபடி செலவில் அறுவடை முக்கிய பங்கு வகிக்கிறது. கூலியாட்கள் பற்றாக்குறையாக உள்ள இத்தருணத்தில், கூலியாட்கள் பற்றாக்குறையை போக்கவும், அறுவடை செலவை குறைக்கவும் ஏற்ற வகையில் பேட்டரியில் இயங்கும் பருத்தி பஞ்சு எடுக்கும் கருவி வேளாண் துறை மூலம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

நல்லம்பள்ளி யூனியன் பாலவாடி, மொரப்பூர் யூனியன் ஜடையம்பட்டி ஆண்டிப்பட்டி, தொங்கனூர், கேத்திரெட்டிபட்டி, கதிர்நாயக்கனஅள்ள ஆகிய கிராமங்களில் இதற்கான செயல் விளக்கம் சமீபத்தில் நடந்தது. உழவர் பயிற்சி நிலை வேளாண் துணை இயக்குனர் மேகநாதன் விவசாயிகளுக்கு செயல் விளக்கங்களை செய்து காண்பித்தார்.

பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் நிலைய தலைவர் தமிழ்செல்வன், பண்ணை மேலாளர் பன்னீர்செல்வம், வேளாண் துணை இயக்குனர் வேணுகோபால், வேளாண் அலுவலர்கள் கருப்பையா, புவனேஸ்வரி, துணை வேளாண் அலுவலர் மணி மற்றும் உதவி வேளாண் அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு செய்முறை விளக்கம் அளித்தனர்.

பயிற்சிக்கு பின் இக்கருவியை கொண்டு, விவசாயிகள், ஜெயம், பாஸ்கர் ஆகியோர் பருத்தியில் இருந்து தங்கள் வயல்களில் பஞ்சு எடுத்தனர். பின்னர்கள் அவர்கள் கூறும்போது,"சாதாரணமாக பஞ்சு எடுக்கும் பணியில் ஒரு கூலியாள், 20 கிலோ வரையில் பஞ்சு மட்டுமே எடுக்க முடியும். கருவியை பயன்படுத்தி எடுக்கும் போது, 60 கிலோ வரையில் எடுக்க முடிந்தது, என்றனர்.

""இக்கருவியை பயன்படுத்தி அறுவடை செய்வதால், செலவு குறைந்து வருவாய் அதிகரிக்கும், கூலியாட்கள் தட்டுபாடு உள்ளிட்ட பிரச்னைக்கும் தீர்வு கிடைக்கும்' என வேளாண் துணை

இயக்குனர் மேகநாதன் தெரிவித்தார். இக்கருவி, 6,000 ரூபாய்க்கு கிடைக்கிறது. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில், 25 சதவீதம் மானிய விலையில், 10 கருவிகள் இந்தாண்டு வினியோகம் செய்யப்பட்டுள்ளது, என வேளாண் துறையினர் தெரிவித்தனர்.

## 30 நாட்களுக்குள் டெல்டா பிரச்னைக்கு தீர்வு விவசாயிகள் தொடர் போராட்டம் வாபஸ்

ஸ்ரீமுஷ்ணம் : ஸ்ரீமுஷ்ணம் பகுதியில் உள்ள கிராமங்களுக்கு டெல்டா சலுகைகள் வழங்குவது குறித்து 30 தினங்களுக்குள் முடிவு செய்யப்படும் என சப் கலெக்டர் அறிவிப்பை ஏற்று விவசாயிகள் தொடர் போராட்டங்களை கைவிட் டனர்.

ஸ்ரீமுஷ்ணம், சோழத்தரம் பகுதியில் 38 கிராமங்கள் டெல்டா பாசன பகுதியில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. இதனால் அதிர்ச்சியடைந்த விவசாயிகள் ஸ்ரீமுஷ்ணம் மற்றும் சோழத்தரம் பகுதியில் சாலை மறியல், தொடர் உண்ணாவிரதம் உள்ளிட்ட போராட்டங்கள் நடத்தி வந்தனர். இந்நிலையில், கடந்த 29ம் தேதி முதல் விவசாயிகள் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர்.

இரண்டு நாள் முடிவில் போராட்டக் குழுவினரிடம் பேச்சுவார்த்தை நடத்திய சப் கலெக்டர் சுப்ரமணியன் 12 மணி நேர மும்முனை மின்சாரம் 30 நாட்களுக்கு வழங்கப்படும் என கூறினார். இதனை ஏற்க மறுத்த போராட்டக் குழுவினர் நேற்று 3ம் தேதி சோழத்தரத்தில் சாலை மறியல் செய்வதாக அறிவித்து உண்ணாவிரதப் போராட்டத்தை முடித்துக் கொண்டனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு சிதம்பரம் சப் கலெக்டர் சுப்ரமணியன் தலைமையில் அவரது அலுவலகத்தில் மீண்டும் பேச்சுவார்த்தை நடந்தது. இதில் போராட்டக்குழுத் தலைவர் தங்க ஆனந்தன், விவசாய சங்க நிர்வாகிகள், ஊராட்சி தலைவர்கள் 6 பேர் உள்ளிட்ட அனைத்து கட்சி பிரமுகர்கள் பங்கேற்ற பேச்சுவார்த்தை நடந்தது.

அதில், தற்போது பயிரிட்டுள்ள சம்பா பயிரைக் காக்க 12 மணி நேர மும்முனை மின்சாரம், புதிய மின் இணைப்பு வழங்கும் போது காவிரி டெல்டா பகுதியில் வழங்கப்படுவது போல் சிறப்பு முன்னுரிமை இணைப்பு தொடர்ந்து வழங்கப்படும்.

டெல்டா சலுகைகளை வழங்க 30 நாட்களுக்குள் உரிய நட வடிக்கை எடுக்கப்படும் என சப் கலெக்டர் சுப்ரமணியன் தெரிவித்தார்.

இதனை ஏற்று நேற்று (3ம் தேதி) நடைபெறுவதாக இருந்த சாலை மறியல் போராட்டம் கைவிடப்பட்டது.

## கொய்மலர் சாகுபடியை ஊக்குவிக்க எதிர்பார்ப்பு : ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் அவசியம்

ஊட்டி : "நீலகிரியில், கொய்மலர் சாகுபடி தொழிலை மேம்படுத்தும் திட்டத்தை, தொய்வில்லாமல் தொடர்வதற்குரிய நடவடிக்கையை, முதல்வர் முடுக்கிவிட வேண்டும்' என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

நீலகிரியின் பிரதான தொழிலான தேயிலை சாகுபடி, கடந்த 2000ம் ஆண்டுகளில் நலிவடைய துவங்கியது. தேயிலைக்கு மாற்றாக, கொய்மலர் சாகுபடி அறிமுகப்படுத்தப்பட்டது.

பல கோடியில் திட்டம்

கடந்த 2003ல், மாநில முதல்வராக இருந்த ஜெயலலிதா, கொய்மலர் சாகுபடியை நீலகிரியில் பிரபலப்படுத்த, பல திட்டங்களை அறிவித்தார்; வங்கி கடன்கள் எளிமையாக்கப்பட்டன. தோட்டக்கலை துறை மூலம், கார்னேஷன், லில்லியம், ஜெர்பரா உட்பட கொய்மலர் சாகுபடி ஊக்கவிப்பட்டது. 100க்கணக்கான விவசாயிகள் எளிதாக வங்கி கடன், தோட்டக்கலை துறை மானியம் பெற்று பசுமைக் குடில் அமைத்து, கொய்மலர் சாகுபடியை துவங்கினர்.

கடந்த 2003, செப்.,13ம் தேதி, ஊட்டி சேரிங்கிராஸ் பகுதியில், எச்.ஏ.டி.பி., திட்டத்தின் கீழ், ஒரு கோடி ரூபாயில், அரசு தோட்டக்கலை கட்டட வளாகம் அமைக்கப்பட்டது. இங்கு, கொய்மலர் உட்பட மலைக் காய்கறி, தோட்டப் பயிர் சாகுபடி, மார்க்கெட்டிங்கை ஊக்கவிக்க ஆலோசனை மையம், மாதிரி பசுமைக் குடில், மலர் ஏற்றுமதி மையம், குளிர்பதன வசதி உட்பட, சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன.

திட்டத்தில் தொய்வு

ஆட்சி மாற்றத்துக்கு பின்பு, கொய்மலர் சாகுபடியில் தொய்வு ஏற்பட துவங்கியது. விவசாயிகள் பலரால் தொழிலை தொடர முடியாமல், வங்கி கடன் தவணையை திருப்பி செலுத்த முடியாமல் திணறினர். அரசு தோட்டக்கலை துறை மூலம் செயல்பட்டு வந்த மலர் ஏற்றுமதி மையமும் செயல்பாடற்று போனது.

பல கோடி ரூபாய் செலவில், முதல்வரால் திறந்து வைக்கப்பட்ட, தோட்டக்கலை கட்டடம் செயல்பாடிழந்து, வெறும் காட்சி பொருளாக மாறியுள்ளது. மலர் சாகுபடியில், பெரிய விவசாயிகள், தங்கள் தொழிலை தொடர, சிறு, குறு விவசாயிகள் பலர், தொழிலை கைவிட்டனர்.

மீண்டும் திட்டம்

"மலர் செடிகளில், எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்கவில்லை. இஸ்ரேல் உட்பட நாடுகளில் இருந்து மலர் விதைகளை இறக்குமதி செய்து, சாகுபடியாளர்களுக்கு விற்று வந்த ஏஜன்டுகள்,

தரமற்ற விதைகளை வழங்கியது தான், மகசூல் குறைய காரணம், என சிறு, குறு மலர் சாகுபடியாளர்கள் சங்கத்தினர், ஆதாரத்துடன் அரசு கவனத்துக்கு கொண்டு சென்றனர். விளைவாக, நீலகிரி மாவட்ட விவசாயிகள், தோட்டக்கலை துறையினர் இணைந்து, கொய்மலர் நாற்று விதை உற்பத்தி மையத்தை துவக்க, 1.40 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. திட்டத்தை, நடைமுறைக்கு கொண்டு வரும் ஆரம்ப கட்டப்பணிகள் துவங்கியுள்ளன.

தொய்வில்லாமல் தொடர வேண்டும் நீலகிரியில், சிறு, குறு தேயிலை விவசாயிகள் பயனடைந்து வரும் "இன்ட்கோ' கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளை மேம்படுத்தும் நோக்கில், மாநில முதல்வர் இன்று, குந்தா கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை பொன்விழாவில் பங்கேற்கிறார்.

"இன்ட்கோ' மூலம் உற்பத்தியாகும் தேயிலை தூளை, ஆவின் பாலகங்களில் விற்கும் திட்டத்தையும் துவக்கி வைக்கிறார். இதன் மூலம் "இன்ட்கோ' தொழிற்சாலையில், உறுப்பினர்களாக உள்ள சிறு, குறு தேயிலை விவசாயிகள் பயன்பெறுவர், என எதிர்பார்க்கப்படுகிறது.

"இதே போன்று, நலிவடைந்துள்ள கொய்மலர் சாகுபடியை மேம்படுத்த, முதல்வரின் ஒப்புதலுடன் வரவுள்ள நாற்று கம்பெனி திட்டமும், அதை தொடர்ந்து நடக்கவுள்ள மலர் சாகுபடியும் சரியான முறையில் நடக்க, பிரத்யேக அதிகாரிகள் குழுவை நியமிக்க வேண்டும். மீண்டும் தொழிலில் தொய்வு ஏற்படாமல் இருக்க, மாநில முதல்வர் நேரடியாக கண்காணிக்க வேண்டும்' என்பதே, சிறு, குறு மலர் சாகுபடியாளர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

04.01.2013 A.M

## விவசாயத்தில் மாற்றம் ஏற்படுத்த முக்கியத்துவம் அளிக்க வேண்டும்




கொல்கத்தா : ''உணவு உற்பத்தியை அதிகரிக்க விவசாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முக்கியத்துவம் அளிக்க வேண்டும்'' என 100வது இந்திய அறிவியல் மாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங் கூறினார். கொல்கத்தாவில் 100வது இந்திய அறிவியல் மாநாடு நேற்று தொடங்கியது. ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி தொடங்கி வைத்தார். பிரதமர் மன்மோகன் சிங், மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, மத்திய அறிவியல் தொழில்நுட்ப அமைச்சர் ஜெய்பால் ரெட்டி உட்பட பலர் கலந்து கொண்டனர். மாநாட்டில் அறிவியல் தொழில்நுட்பத்தின் புதிய கொள்கையை (2013) வெளியிட்டு பிரதமர் மன்மோகன் சிங் பேசியதாவது:

நமது நாட்டு மக்கள் தொகையில் 65 சதவீதம் பேர் கிராமங்களில் வசிக்கின்றனர். உணவு பாதுகாப்பு இலக்கை அடைய 12வது ஐந்தாண்டு திட்டத்தில் வேளாண் வளர்ச்சியை ஆண்டுக்கு 4 சதவீதம் அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதனால், அறிவியல் தொழில்நுட்பம் உட்பட விவசாயத் துறையில் மாற்றத்தை ஏற்படுத்த முக்கியத்துவம் அளிக்க வேண்டும். நீர், நிலம் பற்றாக்குறையால் விவசாய வளர்ச்சி தடைபட்டுள்ளது.

அதனால், விவசாயத்துக்கு தேவையான நீர் சேமிப்பு தொழில்நுட்பங்களை கண்டறிய வேண்டும், நிலத்தின் உற்பத்தி திறனை அதிகரிக்க வேண்டும், பருவநிலை மாற்றத்தை தாக்குப் பிடிக்கும்

புதிய பயிர் வகைகளை உருவாக்க வேண்டும். உலகில் அறிவியலில் மிகச் சிறந்து விளங்கும் ஐந்து நாடுகளில் ஒன்றாக இருக்க இந்தியா விரும்புகிறது. தேசிய வருவாயை அதிகரிக்க இந்தியா விரும்புவதால், ஏழை , பணக்காரர் இடைவெளி குறைக்கும் விதத்தில் அறிவியல் தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டும். இளைய தலைமுறையினர் அறிவியல் சார்ந்த தொழில்நுட்பங்களை பயன்படுத்த வேண்டும்.

மரபணு மாற்ற உணவு, அணுசக்தி, வேற்று கிரக ஆராய்ச்சி போன்ற விஷயங்களை நம்பிக்கை, உணர்ச்சி வசப்படுதல், அச்சம் போன்றவற்றால் தீர்க்க முடியாது. ஆக்கப்பூர்வமான விவாதம், ஆராய்ந்து பார்த்தல், அறிவுத் தெளிவு போன்றவற்றால் மட்டுமே தீர்க்க முடியும். இது போன்ற விஷயங்களை புரிந்து கொள்ள அறிவியல் அணுகுமுறை மிக முக்கியமானது.

அறிவியல் திறமையை வளர்ப்பது, ஆராய்ச்சியை தூண்டுவது, இளம் விஞ்ஞானிகளை வளர்ப்பது, ஆராய்ச்சியில் தனியார் பங்களிப்பு சூழ்நிலையை உருவாக்குவது போன்றவைதான் புதிய கொள்கையின் இலக்கு. நவீன அறிவியல் முன்னேற்றம் அடைய உலக நாடுகளின் ஒத்துழைப்பும் மிக முக்கியம். இவ்வாறு பிரதமர் பேசினார்.

## ஒரு கோடி டன் கோதுமை ஏற்றுமதி செய்ய பரிந்துரை



புதுடெல்லி : சேமிப்பு கிடங்குகளில் தேக்கமடைந்துள்ள கோதுமையில் ஒரு கோடி டன்னை ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று மத்திய அரசுக்கு விவசாயப் பொருட்கள் விலை நிர்ணயக் கமிஷன் பரிந்துரைத்துள்ளது. மத்திய அரசு நிறுவனமான இந்திய உணவு கழகம்(எப்சிஐ), நாடு முழுவதும் அரிசி, கோதுமை ஆகியவற்றை கொள்முதல் செய்து கிடங்குகளில் சேமித்து வைக்கிறது. கட ந்த ஆண்டில் கோதுமை அபரிமிதமான உற்பத்தியை கண்டது.

இதனால், சேமிப்பு கிடங்குகள் நிரம்பி வழிந்து, திறந்தவெளி கிடங்குகளில் கோதுமை மூட்டைகள் வைக்கப்பட்டுள்ளன. இதில் பல லட்சம் டன் கெட்டு வீணாகி போனது. இது தொடர்பாக உச்ச நீதிமன்றமே ஒரு வழக்கில் கண்டித்திருந்தது. இந்நிலையில், மத்திய பட்ஜெட்டுக்கான பரிந்துரையை நிதியமைச்சகத்துக்கு விவசாயப் பொருட்கள் விலை நிர்ணயக் கமிஷன் அனுப்பியுள்ளது.

அதில், கமிஷன் தலைவர் அசோக் குலாட்டி கூறியிருப்பதாவது: வரும் 2013,14ம் ஆண்டில் ஒரு கோடி டன் கோதுமையை மத்திய அரசு ஏற்றுமதி செய்யலாம். அவ்வாறு ஏற்றுமதி செய்தால்தான், புதிதாக உற்பத்தியாகி வரும் தானியங்களை சேமித்து வைக்க முடியும். ஒரு டன் கோதுமையை 300 அமெரிக்க டாலருக்கு ஏற்றுமதி செய்தால், 300 கோடி டாலர் அந்நியச் செலாவணி கிடைக்கும். இவ்வாறு குலாட்டி கூறியுள்ளார். கடந்த ஆண்டில் 45 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதிக்கு மத்திய அரசு அனுமதித்தது. அதில் 13.5 லட்சம் டன் கோதுமை இது வரை ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

இன்றைய வேளாண் செய்திகள்
04.01.2013 A.M

## தானிய கிடங்குகள் நிரம்பி வழிவதால் அடுத்த நிதி ஆண்டில், 1 கோடி டன் கோதுமை ஏற்றுமதி செய்ய திட்டம்

புதுடெல்லி,

தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக கோதுமை விளைச்சல் அதிகமாக இருப்பதால் அரசு தானிய கிடங்குகள் நிரம்பி வழிகின்றன. இதற்கு தீர்வு காணும் வகையில் எதிர்வரும் 2013–14–ஆம் நிதி ஆண்டில் 1 கோடி டன் கோதுமை ஏற்றுமதி செய்ய வேண்டும் என வேளாண் செலவினங்கள் மற்றும் விலைகள் ஆணையம் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

**45 லட்சம் டன்**

நடப்பு 2012–13–ஆம் நிதி ஆண்டில் 45 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இதுவரை 13.50 லட்சம் டன் ஏற்றுமதியாகி உள்ளது.

உலக அளவில் கோதுமை உற்பத்தி மற்றும் பயன்பாட்டில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. கோதுமை நுகர்வில் சீனா முதலிடத்தில் உள்ளது. கடந்த 2011–12 பருவத்தில் நம் நாட்டில் மொத்தம் 9.39 கோடி டன் கோதுமை உற்பத்தி செய்யப்பட்டது. இது, முந்தைய ஆண்டை விட 8 சதவீதம் அதிகமாகும்.

**பயன்பாடு**

பொதுவாக, கோதுமை பயன்பாடு ஆண்டுக்கு 7.60 கோடி டன் என்ற அளவில் உள்ளது. தேவையைக் காட்டிலும் உற்பத்தி அதிகமாக இருப்பதால் கையிருப்பு அதிகரிப்பதுடன், கோதுமையை பாதுகாப்பாக வைப்பதில் இடர்பாடுகள் ஏற்படுகின்றன.

தானிய கிடங்குகளில் போதுமான இடமின்றி திறந்த வெளிகளில் கோதுமை பாதுகாக்கப்படுவதால் ஆண்டுதோறும் பல லட்சம் டன் கோதுமை வீணாகி வருகிறது. இது குறித்து பல்வேறு தரப்பிலும் கடும் விமர்சனங்கள் எழுந்ததால், மத்திய அரசு கோதுமை

ஏற்றுமதிக்கு அனுமதி அளிக்க முடிவு செய்தது. இதனைத் தொடர்ந்து 2011 செப்டம்பர் மாதத்தில் கோதுமை ஏற்றுமதி மீதான தடை சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு நீக்கப்பட்டது. அதற்கு முன்னர் நான்கு ஆண்டுகளாக கோதுமை ஏற்றுமதிக்கு தடை இருந்து வந்தது.

தற்போது உற்பத்தி அதிகரித்து வருவதால் கையிருப்பு உயர்ந்துள்ளது. இந்திய உணவு கழகத்தின் கிடங்குகளில் 6.80 கோடி டன் உணவு தானியங்கள் கையிருப்பில் உள்ளன. இது, கொள்ளளவை காட்டிலும் 8 சதவீதம் (6.30 கோடி டன்) அதிகமாகும். இதில், கோதுமை கையிருப்பு மட்டும் 3.70 கோடி டன்னாகும். மொத்த உணவு தானியங்கள் கையிருப்பில் கோதுமையின் பங்கு 54.4 சதவீதமாக உள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக கோதுமை உற்பத்தி அமோக வளர்ச்சி கண்டு வருகிறது. கடந்த பருவத்தில் கோதுமை உற்பத்தி வரலாறு காணாத அளவில் 9.39 கோடி டன்னாக உயர்ந்தது. மேலும், மத்திய அரசும் விவசாயிகளிடமிருந்து அதிக அளவில் கோதுமையை கொள்முதல் செய்துள்ளது. ஓர் ஆண்டு காலத்தில் கொள்முதல் 1 கோடி டன் உயர்ந்துள்ளது.

**சிறந்த வழிமுறை**

கோதுமை கையிருப்பு, அவசர தேவைக்காக இருப்பு வைக்கும் அளவைக் காட்டிலும் மூன்று மடங்காக உயர்ந்துள்ளது. எனவே, இடவசதி இல்லாமல் கோதுமை வீணாவதைக் காட்டிலும் ஏற்றுமதி செய்வதே சிறந்த வழிமுறை என பொருளியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச சந்தைகளில் கோதுமை விலை குறைவதற்கு முன்னர் ஏற்றுமதி நடவடிக்கைகளை மத்திய அரசு துரிதப்படுத்த வேண்டும் என வேளாண் செலவினங்கள் மற்றும் விலைகள் ஆணையத்தின் தலைவர் அசோக் குலாதி தெரிவித்துள்ளார்.

**விலை 300 டாலர்**

சர்வதேச சந்தைகளில் தற்போது ஒரு டன் கோதுமை விலை சராசரியாக 300 டாலராக உள்ளது. இதன் அடிப்படையில், ஒரு கோடி டன் கோதுமை ஏற்றுமதியில் 300 கோடி டாலர் மதிப்பிற்கு அன்னிய செலாவணி வருவாய் கிடைக்கும்.

## கடந்த 2012–ஆம் ஆண்டில் பால் உற்பத்தி 13 கோடி டன்

புதுடெல்லி,

கடந்த 2012–ஆம் ஆண்டில் ஏறக்குறைய 13 கோடி டன் பால் உற்பத்தியாகி உள்ளதாக முதல்கட்ட மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. 2011–ஆம் ஆண்டில் 12.70 கோடி டன் பால் உற்பத்தி செய்யப்பட்டது. இந்நிலையில், இந்த ஆண்டில் பால் மற்றும் பால் பொருள்கள் விற்பனையில் ஈடுபட்டுள்ளோருக்கு சிறப்பாக அமையும் என இத்துறை ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

**தேவைப்பாடு–அளிப்பு**

அடுத்த சில ஆண்டுகளில் பால் உற்பத்தி 3 முதல் 4 சதவீதம் வரை அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதே சமயம் தேவைப்பாடு 4–5 சதவீதம் உயரும் என தெரிகிறது. இதனால் தேவைப்பாட்டிற்கும், அளிப்புக்கும் இடையே கணிசமான இடைவெளி ஏற்படும். இதை ஈடு செய்ய வேண்டுமானால் இறக்குமதியை சார்ந்திருக்க வேண்டிய நிலை உருவாகும். இந்த நிலையில் உள்நாட்டில் பால் உற்பத்தியை அதிகரிக்க மத்திய, மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

நம் நாட்டில் தற்போது 14 மாநிலங்கள் பால் உற்பத்தியில் முன்னிலை வகிக்கின்றன. கறவை மாடுகளின் பால் உற்பத்தி திறனை அதிகரிக்கும் வகையில் ரூ.2,242 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்திய கிராமங்களில் 7 கோடி விவசாயிகள் பால் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் அமைப்பு சார்ந்த பால் பொருள்கள் உற்பத்தி துறையில் கால் பதிக்க வேண்டும் என மத்திய அரசு விரும்புகிறது.

புத்தாண்டில் பால் உற்பத்தி துறையினருக்கு வளமான வர்த்தக வாய்ப்புகள் உள்ளதாக தெரிகிறது. பால் சப்ளை கணிசமாக அதிகரிக்கும் என்பதுடன், நல்ல விலையும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பாலை முக்கிய மூலப்பொருளாக கொண்டு தயாரிக்கப்படும் ஐஸ்கிரீம் போன்ற உணவு பொருள்களின் விற்பனையும் அமோக வளர்ச்சி காணும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக இத்துறையில் ஃபான்ட்டெரா, லாக்டெலிஸ், ஃபிரைஸ்லாண்டு காம்பினா போன்ற சர்வதேச நிறுவனங்கள் இந்திய பால் பொருள்கள் உற்பத்தியாளர்களுடன் கூட்டு மேற்கொள்வதற்கான வாய்ப்புகளை ஆராய்ந்து வருகின்றனர். இதனால் இத்துறையில் தனியார் பங்கு முதலீடும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**உலக பால் உற்பத்தி**

உலக பால் உற்பத்தி சென்ற ஆண்டில் 2.7 சதவீதம் வளர்ச்சி கண்டு 75 கோடி டன்னை எட்டியிருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. மேலும் சர்வதேச அளவில் தனிநபர் பால் நுகர்வு 1.6

சதவீதம் உயர்ந்து 106.10 கிலோவாக அதிகரித்துள்ளதாக தற்காலிக புள்ளிவிவரம் ஒன்று தெரிவிக்கிறது. நம் நாட்டில், நடப்பு நிதி ஆண்டில் (2012–13) கொழுப்பு நீக்கிய பால் பவுடர் ஏற்றுமதி 50,000 டன்னை எட்டும் என கணக்கிடப்பட்டுள்ளது.

## சர்க்கரை இறக்குமதி வரியை 60 சதவீதமாக்க கோரிக்கை

புதுடெல்லி,

சர்க்கரை இறக்குமதி மீதான வரியை 60 சதவீதமாக உயர்த்த வேண்டும் என உத்தரபிரதேசத்தில் உள்ள சர்க்கரை ஆலைகள் கோரிக்கை விடுத்துள்ளன. இதனால் பிரேசில் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து மலிவு விலையில் இறக்குமதியாகும் சர்க்கரை பெருமளவு கட்டுப்படுத்தப்படும் என தெரிவித்துள்ளன. தற்போது சர்க்கரை மீதான இறக்குமதி வரி 10 சதவீதமாக உள்ளது.

சர்வதேச சந்தையில் சர்க்கரை விலை குறைந்துள்ள நிலையில், மூல சர்க்கரை அதிக அளவில் இறக்குமதி செய்யப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு மீண்டும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்த வகையில், அக்டோபர் 1–ந் தேதி தொடங்கிய புதிய பருவத்தில் இதுவரை உள்நாட்டு விற்பனை மற்றும் ஏற்றுமதி 7 லட்சம் டன்னை எட்டியுள்ளது. இது, முந்தைய இரண்டு பருவங்களில் இறக்குமதியான மொத்த சர்க்கரையை விட அதிகமாகும்.

தற்போது பாகிஸ்தானிலிருந்து சர்க்கரை (சீனி) பெரிய அளவில் இறக்குமதி செய்யப்படுகிறது. இது இந்திய சர்க்கரையை விட கிலோவுக்கு ரூ.5 குறைவாக உள்ளது. இந்நிலையில் மேலும் இறக்குமதி அதிகரிக்க வாய்ப்புள்ளது என சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன. இதனால் குறிப்பாக உத்தரபிரதேச மாநில ஆலைகள் பாதிக்கப்படுவதாக தெரிகிறது. மேலும் அங்கு அக்டோபர்–டிசம்பர் மாத காலத்தில் சர்க்கரை உற்பத்தி 11 சதவீதம் குறைந்து 19.25 டன்னாக சரிவடைந்துள்ளது. எனினும் நாடு முழுவதுமாக உற்பத்தி 2.5 சதவீதம் உயர்ந்து 79.60 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் சர்க்கரை உற்பத்தி முறையே 17 சதவீதம் மற்றும் 4 சதவீதம் உயர்ந்ததே இதற்கு காரணமாகும்.